[1972 மார்ச் 3

கோமுகி நதியின் குறுக்கே மேம்பாலம்

*288. வின—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி—கச்சிராயபாளையம் சாலையில் கோமுகி நதியின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கு அரசிடம் செயற் குறிப்பு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இவ் வேலை வரைவு நான்காம் ஐந்தாண்டுத் திட்ட கால வேலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. வருங்காலத்தில் நிதி நிலைமையை அனுசரித்து இவ்வேலை நிறைவேற்றப்படும்.

திரு. ந. நாச்சியப்பன்: இந்த மணிமுத்தா நதியின் குறுக்கே இருக்கிற கள்ளக்குறிச்சி—கச்சிராயபாளையம் சாலையில் மேம்பாலம் கட்டப்படாமல் இருப்பதால், அங்குள்ள அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடும்போது பேருந்துகள் செல்வதற்கு வசதியில்லாமல், மாட்டு வண்டிகள் போன்றவை செல்வதற்கு முடியாமல் இருக்கின்றன. ஒரு ஆண்டு ஒரு மாட்டு வண்டி அடித்துச் செல்லப்பட்டு அந்த மாடுகள் இறந்துபோய் விட்டன. அந்த வண்டியை ஓட்டிச் சென்றவர் இறந்து இருக்கிற நிலையும் ஏற்பட்டிருக்கிறது. மலைவாழ் மக்கள் அந்தப் பாலத்தின் மேல் வரக்கூடிய சூழ்நிலை இருப்பதால் விரைவாக இந்த மேம் பாலத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அந்த இடத்தில் A Bed-level causeway with cement concrete pavement இருக்கிறது. கோரிக்கை மேம்பாலம் கட்டுவது என்பது. இந்தக் கோரிக்கை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது. நிதிநிலைமையை அனுசரித்து இது எடுத்துக் கொள்ளப்படும் என்ற பதில்தான் சொல்லியிருக்கிறேன்,